# தமிழ்த் திருநாள்

## பொங்கற் புது வாழ்த்து.



வித்துவான், சுந்தர. சண்முகனுர்.

*ஒன்பதாவது வெளியீடு!* *இரண்டாவது பதிப்பு!!*

## எங்கள் உரை:

"**தமிழ்த் திருநாள்**" அல்லது "**பொங்கற் புது வாழ்த்து**" என்னும் இந்நூலை, எங்கள் பொங்கல் வாழ்த்து வெளியீடாக வெளியிடுகின்றோம். இந்நூற் பாடல்களை ஏற்புடைய எந்த இசையில் வேண்டுமாயினும் பாடலாம். மேலும், இந்நூல், பொங்கல் வாழ்த்தாக நண்பர்கட்கு அன்பளிப்புச் செய்தற்கு உரியதாகும். வாளா வாழ்த்துவதைக் காட்டிலும், வாழும் வகையை நினைவு செய்து வாழ்த்துவது நல்லதல்லவா?

இந்நூற்குப் பேராதரவு நல்குமாறு அன்பர்களை வேண்டுகிறோம். அன்பளிப்புச் செய்பவர்கள், கீழ்க் கண்ட கட்டத்தை நிறைவு செய்து வழங்கலாம்.

இங்ஙனம்,

பைந்தமிழ்ப் பதிப்பகம்
புதுச்சேரி, 20-12-48.

**சிங்கார-குமரேசன்.**
**சுந்தர-சண்முகன்.**

"எங்கள் நன்றியும் எங்கள் வணக்கமும்,
பொங்கல் வாழ்த்துடன் புரிகின்றேமே"

**உயர்திரு**........................................................................**அவர்கட்கு,**

இந்நூலைத் தமிழ்த் திருநாளாம் பொங்கற் புது நாள் வாழ்த்தாக அன்புடன் அளிக்கின்றேன்.

இங்ஙனம், அன்புள்ள

இடம்......................

நாள்......................

..................................
(வழங்குவோர் பெயர்)

# தமிழ்த் திருநாள்

அல்லது

# பொங்கற் புது வாழ்த்து.

இது, பொங்கல் வாழ்த்தாக நண்பர்கட்கு அன்பளிப்புச் செய்தற்குரியது.

ஆசிரியர் :

**வித்துவான், சுந்தர. சண்முகனார்,**

மயிலம் தமிழ்க்கல்லூரியில் விரிவுரையாளரா யிருந்தவர்.

பதிப்புரிமை] [விலை அணா 1

பைந்தமிழ்ப் பதிப்பகம்,
61-பி, வைசியர் தெரு,
**புதுச்சேரி.**

# தமிழ்த் திருநாள்

அல்லது

# பொங்கற் புது வாழ்த்து.

## தமிழ்த்தாய் வணக்கம்.

*பொங்கற் புதுமலர் பொன்னடி சூட்டினேன்*
*தங்கு தமிழ்த் திருநாள் தன்னில்*
*மங்கலம் பெருக மகிழ்தமிழ்த் தாய்க்கே.*

## 1. பொங்குக பாலே! பொங்குக் பாலே!

### எடுப்பு

*பொங்குக பாலே! பொங்குக பாலே!*
*எங்கும் மங்களம் தங்கிப் பொலிய* (பொங்குக)

### உடன் எடுப்பு

*செங்கை வளையலாம் சங்கு முழங்க*
*மங்கையர் சர்க்கரைப் பொங்கல் வழங்க* (பொங்குக)

### அடிகள்

*கன்னியர் மொழிபோல் கரும்பு செழிக்கப்*
*பண்ணிய நெற்பயிர் பாரெலாம் கொழிக்க*
*வண்ணக் காளைகள் வண்பசு வளமுற*
*நன்னீர் பெருகியே நாடு நலமுற* (பொங்குக)

போரினை நாட்டினில் புரியும் அரக்கர்
நேரிய மனிதராய் நிலைத்துத் திருந்த
ஊரில் எல்லோரும் உடன்பிறந் தோரென
ஊறிய ஒற்றுமை ஊற்றினை அருந்த (பொங்குக)

கல்வியாம் கதிரவன் கலைபெற்றுக் காய
கல்லா மடமையாம் காரிருள் மாய
பல்வகைத் துன்பமாம் பனித்துளி வீய
நல்வகை இன்பமாம் நல்லொளி தோய (பொங்குக)

## 2. கொண்டாடுவோம்!

### எடுப்பு

கொண்டாடுவோம்—நாம்—கொண்டாடுவோம்
குலவி மகிழ்ந் தே (கொண்டா)

### உடன் எடுப்பு

திண்டோள் மலையெனத் திரண்டு நீளத்
தண்டா வளமுறத் தமிழ்த்திரு நாளை (கொண்டா)

### அடிகள்

தமிழ்ப்புத் தாண்டாம் தையினைப் போற்றித்
தைதோம் தையத்தோம் தைதோமெனச் சாற்றி
அமிழ்தாம் பால்தரும் ஆவினம் காப் பாற்றி
ஆதர விலோர்க்கே அருங் கொடை யாற்றி (கொண்டா)

குழல்மொழி யாருடன் குலவித் தளிர்த்து
மழலை மொழியும் மைந்தரை அளித்து
எழிலுறு வீட்டினில் இன்பத்தில் குளித்துப்
பொழிலில் அன்றிலின் பூரித்துக் களித்து (கொண்டா)

பல்வித மக்களும் பரந்து கூடியே
கல்வி நிறைந்த கழகங்கள் நாடியே
இலக்கியச் சோலையில் மயில்போல் ஆடியே
இன்பக் கவிகளைக் குயில்போல் பாடியே (கொண்டா)

## 3. இன்னமும் உறங்குவது ஏன்?

### எடுப்பு

இன்னமும் உறங்குவ தேன்—எந்தமிழா (இன்னமும்)

### உடன் எடுப்பு

உன்னிலு மேயன்று ஊக்கம் குறைந்தார்
உலகி லேயின்று ஆக்கம் நிறைந்தார் (இன்னமும்)

### அடிகள்

நந்தம துமொழி நயம்பல நல்கும்
செந்தமிழ் மொழியெனும் செருக்கி னுலோ?
நந்தம துநாடு நலம்பல மல்கும்
செந்தமிழ் நாடெனும் சிறப்பி னுலோ? (இன்னமும்)

இந்தியா முழுமையும் இமய வரம்பன்
செந்தமி ழால் ஆட்சி செய்ததை நினைத்தோ?
நந்தலில் இமய நனிமலை தன்னில்
பைந்தமிழ்க் கொடியன்று பறந்ததை நினைத்தோ? (இ)

அன்றைக் கிருந்தநம் ஆற்றலை அறிவாய்
இன்றைக் குறங்கியே இருப்பதும் தெரிவாய்
கன்றுக்குப் பாலின்றிக் கறப்பவர் போலே
என்றைக்கும் ஏய்ப்பவர் இருப்பார்கள் மேலே (இ)

## 4. தலைநிமிர்வாய் தமிழா!

### எடுப்பு

தலைநிமிர்வாய் தமிழா—தண்
கலைபல வளர்த்தே (தலைநிமிர்)

### உடன் எடுப்பு

மலையாம் மார்பும் மயங்கா நெஞ்சும்
குலையா நோக்கும் கொண்டுசிங் கம்போல் (தலைநிமிர்)

### அடிகள்

உண்ண உணவில்லையோ, உடுக்க நெசவில்லையோ,
எண்ண அறிவில்லையோ, எதிர்க்க வீரமில்லையோ,
கன்னல் மொழியில்லையோ, களிக்க இடமில்லையோ,
என்ன குறைவுனக்கு? எல்லாம் இருக்கும்போது (தலை)

தருக்குநன் னூலில்லையோ, தண்புல வோரில்லையோ,
உருக்கும் இசையில்லையோ, உய்யும் வழியில்லையோ
இருக்கும் வளங்களினால் இன்னும் பலவளமும்
பெருக்கிப் பயன்பெற்றுப் பெருமையாய் நிலவலாம் (தலை)

## 5. தமிழினைத் தாழ்த்தலாமோ?

### எடுப்பு

தமிழினைத் தாழ்த்த லாமோ—தமிழா (தமி)

### உடன் எடுப்பு

இமிழ்கடல் உலகில் இனித்திடும் ஒருமொழி
இதுவென பாரதி இயம்பிய திருமொழி (தமி)

### அடிகள்

நம்பிய தாய்தன்னை நடுவில் கெடுப்பதோ,
கும்பகோணத்தில்தம்பி கோதானம் கொடுப்பதோ (த)

தமிழர் திருமணத்தில் தமிழினைத் தள்வதோ,
உமிழாது பிறமொழி உயரக் கொள்வதோ (த)

நந்தம் கோயிலில் நந்தமிழ் தாழ்வதோ,
வந்த வடமொழி வசதியாய் வாழ்வதோ (த)

சொந்த மொழியையே சுவைக்கா நாட்டினில்
இந்தி மொழிவேறு வந்தது போட்டியில் (த)

உடலும் பொருள்களும் உயிருமே நின்று
கெடலில் தமிழேநீ கேளாய் நன்று (த)

## 6. தமிழின் பெருமை.

### எடுப்பு

தமிழின் பெருமை நீ—தான் அறிவாயோ
தமிழ்போல் இனிக்கும் தண்மாங் குயிலே (தமிழின்)

### உடன் எடுப்பு

அமிழ்தினும் இனியது அருந்தி மகிழவே,
அஞ்செவி நிறைவது நெஞ்சம் நெகிழவே (தமிழின்)

### அடிகள்

முன்னே தோன்றி, மொழிபல வழங்கிற்று,
தன்னே ரொத்துத் தனித்து முழங்கிற்று (தமிழின்)

தெய்வந் தனைப்பின்னே திரிய வைத்தது,
உய்வழி கற்றோர்க்கு உறச்செய் வித்தது (தமிழின்)

முன்னமோர் புலவற்கு முரசு கட்டிலில்
மன்னன் விசிறியே மகிழ விட்டது (தமிழின்)

ஆரியம் போல் வழக்(கு) அழிந்து மறையாது,
நேரிய புகழுடன் நின்று குறையாது (தமிழின்)

எண்ணிய வர்க்கருள் இறைவனைப் போல
நண்ணி வளர்ப்பவர்க்கு நலந்தரும் சால (தமிழின்)

## 7. காலங் கழிப்பீரோ?

### எடுப்பு

காலங் கழிப்பீரோ—இனியும்
கன்னித் தமிழைக் கற்றுக் களிக்காமல் (காலம்)

### உடன் எடுப்பு

ஞாலம் எல்லாம் புகழ் நந்தமிழ் அன்னை
ஓலமிட் டேயழ ஊமையாய் மன்னி (காலம்)

### அடிகள்

உண்ணும் உணவுமே உடுக்கும் உடையுமே,
நண்ணுசிற் றின்பமுமே நாடி உழன்றே,
இன்ன பிறவேபேர் இன்பமா கக்கருதித்
தன்னலம் ஒன்றையே தாவிச் சுழன்றே (காலம்)

சிலப்பதி காரமாம் செந்தே னினையும்
அளப்பில் குறளாம் அமிழ்தந் தனையும்
கலப்பில் சங்கநூற் கனிச்சாற் றினையும்
களிப்பா யுண்ணாது காஞ்சிரங் காய்நாடி (காலம்)

அழியாச் சுவையினை அளிப்பதும் உணவன்று,
அழியா அழகினை, அளிப்பதும் உடையன்று,
அழியா நல்லின்பம் அளிப்பதும் காமமன்று,
அழியாத் தமிழே! அதைநுக ராதுநின்று (காலம்)

---

## 8. புலவரைப் போற்றிடுவீர் !

### எடுப்பு

புலவரைப் போற்றிடுவீர் !
புகழுறு நந்தமிழ்ப் (புல)

### உடன் எடுப்பு

நிலவரை யதனில் நிலைத்துநிற் பதுதான்
புலவர்தம் புகழே புகல்கின் றேன்நான் (புல)

### அடிகள்

தொல்காப் பியரின்று தோன்று கின்றார்.
ஒல்கா வள்ளுவர் உயர்ந்திடு கின்றார் (புல)

இளங்கோ வடிகள் விளங்கு கின்றார்
துளங்காக் கம்பரும் துலங்கு கின்றார் (புல)

சேக்கிழார் இன்று சிறப்புறு கின்றார்
சீர்க்கவி பாரதி - செழித்திடு கின்றார் (புல)

பொன்விளை நாடும் புலவர் இலாவிடின்
கண்ணில் குருடரின் கலங்குவ தாமே (புல)

## 9. எடுத்துரைப்பாய்!

### எடுப்பு

எடுத்துரைப்பாய் அவர்க்கே—இளங்கிளியே!
இனியாகிலும் தமிழ் கற்பீர் என்று (எடு)

### உடன் எடுப்பு

அடுத்த பிறமொழியே ஆதரிக்கின் றார்சிலர்
தடுத்துத் தமிழ் மொழியைத் தாழ்த்துகின் றார்சிலர் (எ)

### அடிகள்

ஆரியம் வந்ததும் அதைமிகத் துதித்தார்,
நேரிய ஆங்கிலம் நெஞ்சினில் பதித்தார்,
ஆரிய இந்தியாம் ஆற்றினில் குதித்தார்,
சீரிய அன்னையாம் செந்தமிழ் மிதித்தார் (எ)

அயல்மொழி கள்படித்தால் அவற்றிலே யேவீழ்ந்து
மயல்மிகக் கொள்ளாமல் மாதமி ழிலும்ஆழ்ந்து
கயல்விழி யாரையும் கற்கச்செய் தேவாழ்ந்து
அயல்மொழிக் கலைகளை அமைப்பீர் தமிழிலென்றே (எ)

## 10. வாழ்க வாழ்கவே !

### எடுப்பு

வாழ்க வாழ்கவே—செழித்து
வையம் முழுதும் வளம்பல கொழித்து (வாழ்க)

### உடன் எடுப்பு

வாழ்கநம் தமிழர் வாழ்க திராவிடர்
வாழ்கநம் இந்தியர் வாழ்க உலகினர் (வாழ்க)

### அடிகள்

தேனினும் இனிய தீந்தமிழ் வாழ்க
மானினும் இனிய மங்கையர் வாழ்க (வாழ்க)

கள்ளினைப் போக்கிக் கடுங்கொலை நீக்கிக்
காந்தியார் கொள்கையைக் கருத்தினில் தேக்கி (வாழ்க)

நிறப்போர் நிகழ்த்தும் நீள்செருக் கின்றி
மறப்போர் விலக்கி மகிழ்ச்சியில் துன்றி (வாழ்க)

உணவும் உடையும் உறையுளும் மன்னிப்
பணமும் படிப்பும் பற்பலவும் துன்னி (வாழ்க)

துன்பம் என்பதே தோன்றா இறைவனின்
இன்பநல் வீடாக இவ்வுலகினை யாக்கி (வாழ்க)

வித்துவான், சுந்தர. சண்முகனாரின்

## வெளியீடுகள்:

1. **வீடும் விளக்கும்.** விலை ரூ. 1
*திருமணப் பரிசுக்குரிய வாழ்க்கை ஓவியம்! பெண்ணின் பெருமையின் பிழம்பு! 120 பக்கம்.*

2. **தனித்தமிழ்க் கிளர்ச்சி.** விலை அணா 5.
*மூன்று பெண்மணிகளின் வினா விடைகள். புரட்சிப் புது விருந்து!*

3. **காந்தியின் நாகரிகம்.** (கைவசம் இல்லை.) அணா 1.

4. **திருக்குறள் தெளிவுரை—1.** விலை அணா 4.
*உயர்நிலைப்பள்ளி முதல் பாரத்திற்குரியது.*

5. **திருக்குறள் தெளிவுரை—2.** விலை அணா 5.
*உயர்நிலைப்பள்ளி இரண்டாம்பாரத்திற் குரியது.*
*(3, 4, 5–பாரங்கட்கு அச்சிலே)*

6. **ஆத்திசூடி அமிழ்தம்.** விலை அணா 5.
*ஆத்திசூடி வாக்கியங்கட்குரிய நீதிக்கதைகள்.*

7. **குழந்தைப் பாட்டு.** விலை அணா 3.
*சிறுவருக்கேற்ற 40 பாட்டுக்கள்—மெட்டுடன்.*

8. **சிறுவர் செய்யுட்சோலை.** விலை அணா 4.
*பாரதியார், பாரதிதாசன், தேசிக விநாயகம்பிள்ளை முதலிய கவிஞர்களின் பாடல்கள்—உரையுடன்.*

9. **தமிழ்த் திருநாள்** *அல்லது*
**பொங்கற் புது வாழ்த்து** விலை அணா 1.
*பொங்கல் வாழ்த்துப் புதுப் பாடல்கள்.*

10. **இலக்கண அகராதி** *(விரைவில் வெளிவரும்)*

*விற்பனையாளருக்குத் தக்க கழிவு உண்டு.*

*கிடைக்குமிடம் :*

**பைந்தமிழ்ப் பதிப்பகம்,**

*61—பி, வைசியர் தெரு, புதுச்சேரி.*

*புகைவண்டி நிலையப் (ரயில்வே புக்ஸ்டால்) புத்தகக் கடைகளிலும் கிடைக்கும்.*

---

*சந்தானம் பிரிண்டிங் ஒர்க்ஸ், புதுவை.*